[நண்பகல் 12-00]

ஆகவே இந்த 120 ரூபாயை 640 ரூபாயாக உயர்த்தியிருப்பதால் அது சிறு வீடுகளுக்கு மின் இணைப்புக்கு அவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொல்வது தாங்க முடியாது, குறிப்பாக, சிறு குடும்பங்களுக்கும் மத்திய வர்க்கத்தினருக்கும் தாங்க முடியாததாக இருக்கும். ஆகவே, பழைய மாதிரியே 120 ரூபாய் கட்டினால் போதும் என்று ஆக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருநெல்வேலியில் கொடுமுடியாறு அணைத் திட்டம் 40 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு இன்றைக்கு கைவிடப் படுவதாகச் சொல்லப்படுகிறது அந்த எஞ்சினியர் ஆபிஸ் கூட மூடப்படுவதாகச் சொல்கிறார்கள். அங்கே போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். 40 லட்சம் ரூபாய் செலவழித்தும் கூட ஏன் நடத்தப்பட வில்லை என்பதை அரசு பரிசீலனை செய்து அதை அமலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே திருநெல்வேலி மாவட்டத்திலே சிவகிரியில் கோம்பை அணைத் திட்டம் திட்டமிடப் பட்டது; ஆனால் அமலாக்கப்படாத நிலையில் இருக்கிறது, அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலத்திலே வெற்றி வேந்தன் நாடக சபாவினர் தீண்டாமை மதுவிலக்கு சம்பந்தமான நாடகங்களை நடத்திக் கொண்டிருந்தார்கள். பத்து ஆண்டுகளாக. ஆனால், அவர்களுக்குத் திடீரென்று லைசென்ஸ் கொடுக்கப்படாமல் வேறு யாருக்கோ கொடுத்து விட்டதாகச் சொல்கிறார்கள். ஏதோ கட்சிக் கண்ணோட்டத்தோடு அப்படிச் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி இருந்தால் அது தவறான காரியம். பத்து ஆண்டுகளாக நடத்தி வந்தவர்களுக்கு மீண்டும் லைசென்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*<u>திரு. மு. கருணாநிதி :</u> தலைவர் அவர்களே, 1978-79 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இங்கு பேசிய பல்வேறு உறுப்பினர்களும் கட்சிகளின் தலைவர்களும் இந்த அவையில் அரசாங்கத்தினுடைய கொள்கை ஏடான ஆளுநர் உரை ஆற்றப்படாமல் நிதிநிலை அறிக்கைக்கே நேரடியாக வந்து விட்டது அவையின் மரபுக்கு உகந்தது அல்ல என்பதையும் சுட்டிக் காட்டி இப்படி ஒரு தவறு நடந்தது வருந்தத்தக்கது என்ற தங்களுடைய ஆழ்ந்த கவலையையும் தெரிவித்து அரசாங்கத்தினுடைய கொள்கையின் மீது 6 அல்லது 7 நாட்கள்

விவாதிக்கக் கூடிய வாய்ப்பினை இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் இழந்துவிட நேரிட்டது என்பதையும் குறிப்பிட்டு எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்களை நானும் வழிமொழிகின்ற நிலையிலே இருக்கிறேன்.

ஆளுநர் என்கின்ற பதவி ஒன்று தேவையா என்ற வினா எழுகின்ற நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் அளிக்கின்ற பதில் வேறானது. ஆனால் அந்தப் பதவி ஒன்று இருந்து அந்தப் பதவிக்கு உரியவர் மூலமாக அரசாங்கத்தினுடைய கொள்கை விளக்கங்கள் நிதிநிலை அறிக்கைக்கு முன்பு வைக்கப்படுகிற மரபு இந்த ஆண்டு கைவிடப் பட்டிருப்பது உள்ளபடியே ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல என்பதை நான் அவை முன்னவர் என்னுடைய நண்பர் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1978-79 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்த ஆண்டு வரவாக வரக்கூடியது 680 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டு விட்டு இதுவும் பற்றாக் குறை நிதிநிலை அறிக்கை தான் என்றும் நிதியமைச்சர் தன்னுடைய அறிக்கையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார். கடந்த 7,8 திங்கள்களுக்கு முன்பு நிதி நிலை அறிக்கையை இந்த அவையிலே வைத்து அந்த அறிக்கையில் பற்றாக் குறை எவ்வளவு என்பதைச் சுட்டிக் காட்டி இந்தப் பற்றாக்குறையை எந்த எந்த வகைகளில் எல்லாம் சரிக்கட்டுவோம் என்பதற்காக சில வழிமுறைகளை எடுத்துச் சொல்லி அவைகளிலே தலைசிறந்த வழி முறை லஞ்ச லாவண்யங்கள், ஊழல்கள் இவைகளை ஒழிப்பதன் மூலம் இந்தப் பற்றாக் குறை சரிக்கட்டப்படும் என்பதை எடுத்துச் சொன்னார்கள்.

பற்றாக் குறை சரிக்கட்டப் படாத நிலையைக் காணுகிற நேரத்திலே அவர்கள் குறிப்பிட்ட லஞ்ச லாவண்யங்கள், ஊழல்கள் இவைகள் எல்லாம் இன்னும் அகற்றப்படவில்லையோ என்ற ஐயப்பாடு—இப்படி பற்றாக்குறை மேலும் வளருகிற நேரத்திலே—அவை உறுப்பினர்களுக்கு ஏற்படாமல் இருக்க முடியாது என்று கருதுகிறேன். ஆளுங் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் ''பார்த்தீர்களா இந்த ஆண்டு எங்களுடைய வரவு-செலவுத் திட்டத்தில் 680 கோடி ரூபாய் வரவு காட்டியிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழக அரசு 500 கோடி ரூபாய் அளவிற்குத்தான் தங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே வரவினைக் காட்டினார்கள். இது எவ்வளவு பெரிய முன்னேற்றம்'' என்றெல்லாம் அதை ஒரு பெரிய சாதனை என்ற தலைப்பிலேகூடக் கொண்டுவந்து இங்கே உரையாற்றினார்கள். அவர்கள் அவைகளை வேண்டுமென்று பேசினார்கள் என்று நான் கருதவில்லை. சிலர் புரிந்து கொண்டு பேசியிருக்கலாம், சிலர் அதைப் பற்றி புரியாமலும் பேசியிருக்கலாம்.

1978 மார்ச் 1] [திரு. மு. கருணாநிதி]

ஆனால், இந்த அவைக்கு நான் விளக்க வேண்டிய அவசியத்திலே இருக்கின்ற ஒன்று, 1968-69 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே வைத்த பொழுது வரவு வரும் என்று எதிர் பார்க்கப்பட்ட தொகை 248 கோடி ரூபாய், 1975-76 இல், அதாவது கழக அரசு கலைக்கப்பட்ட அந்தக் காலக் கட்டத்தில் இந்த அரசினுடைய வரவு நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட எதிர் பார்க்கப்பட்ட வரவு 501 கோடி ரூபாய். பிறகு 1976—77-இல் குடியரசுத் தலைவர் ஆட்சியில் 501 கோடி ரூபாய் 576 கோடி ரூபாயாக வளர்ந்து 1977—78 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை நாடாளு மன்றத்திலே நிதியமைச்சர் எச் எம். படேல் அளித்தபொழுது அது 635 கோடி ரூபாய் வரவு என்று எதிர்பார்க்கப்பட்டது. அந்த 635 கோடியாக வளர்ந்தது தான் 1978—79 ஆம் ஆண்டு இந்த நிதிநிலை அறிக்கையில் 680 கோடி ரூபாய் வரவு வரும் என்று வடிவம் எடுத்திருக்கிறது என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

இதிலே மிக முக்கியமாக மூன்று துறைகளை எடுத்துக் கொண்டால், கல்வி வேளாண்மை மருத்துவம் ஆகிய இந்தத் துறைகளுக்குச் செலவிடப்பட்ட தொகை 1968—69 ஆம் ஆண்டிலே எவ்வளவு என்பதையும் இப்பொழுது எவ்வளவு என்பதையும் ஒப்பிடுகின்ற நேரத்தில் இது எப்படி படிப்படியாக வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். 248 கோடி ரூபாய் வரவு வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட 1968 –69 ஆம் ஆண்டில் கல்வி, வேளாண்மை, மருத்துவம் ஆகிய இந்த மூன்று முக்கிய துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 87.10 கோடி ரூபாய், 501 கோடி ரூபாய் வரவு வரும் என்று மதிப்பிடப்பட்ட கழக ஆட்சியில் அதாவது 1975 –76 இல் கல்வி, வேளாண்மை, மருத்துவம் ஆகிய இந்த மூன்று துறைகளுக்காக 181.78 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. குடியரசுத் தலைவர் ஆட்சியில் 1976—77 இல் 576 கோடி ரூபாய் வரவு வரும் என்று மதிப்பிடப்பட்ட அந்தக் காலக் கட்டத்தில் இந்த மூன்று துறைகளுக்கும்—கல்வி, வேளாண்மை மருத்துவம் ஆகிய மூன்று துறைகளுக்கும்—195.64 கோடி ரூபாய் மொத்தமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. 635 கோடி ரூபாய் வரவு வரும் என்று எதிர்பார்த்து மதிப்பிடப்பட்ட 1977—78ஆம் ஆண்டு எச். எம். படேல் நாடாளுமன்றத்தில் வைத்த நிதிநிலை அறிக்கையில் கல்வி, வேளாண்மை, மருத்துவம் ஆகிய துறைகளுக்கு 229-69 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது 680 கோடி ரூபாய் வரவு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற பொழுது இந்த மூன்று துறைகளுக்கும் 253.59 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆக, 229 கோடியிலிருந்து 253 கோடியாக உயர்ந்துள்ளது. வரவும். படேல் அவர்கள் பட்ஜெட் சமர்ப்பித்தபொழுது 635 கோடியாக வளர்ந்தது, 680 கோடியாக இப்பொழுது அந்த நிலையை அடைந்திருக்கிறது.

எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் அவ்வப்பொழுது வரவுகள் அதிகப்பட்டு வருகின்ற நேரத்தில் அதற்கான ஒதுக்கீடுகளும் அதிகமாகிக் கொண்டு வருகின்றன என்பதைத்தான் இது காட்டுகிறது என்பதைச் சுட்டிச் சொல்லத்தான் இந்த விவரங்களை இந்த மாமன்றத்தில் நான் சொல்ல முன் வந்தேன்.

இப்படி ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும் மக்கள் ஆட்சி நடைபெற்றாலும், அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்காமல் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்றாலும், வரவுக்கு ஏற்றவாறு ஒதுக்கப்படுகின்ற நிலைமையைத்தான் இந்த அறிக்கைகள் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

இது ஒரு மரபு வழியில், நேற்றைய தினம் பேராசிரியர் குறிப்பிட்டதைப் போல தொடர்ந்து நடைபெற்று வருகின்ற செலவுகள், ஒதுக்கீடுகள், வரவுக் கேற்றவாறு ஒதுக்கப்படுகின்றன என்ற அளவிலே நாம் இதை வரவேற்கிறோம். அதுதான் நிலைமை என்பதை உணர்கிறோம்.

இதற்கிடையிலே நாங்கள் புதிதாகத் தெரிந்து கொள்ள விரும்புவது, இந்தப் புதிய அரசினுடைய கொள்கைகள், திட்டங்கள், அவைகளின் மூலம் செய்யப்படப் போகின்ற காரியங்கள் சாதனைகள் என்னென்ன என்பதைத்தான் இந்த அவையிலே நாங்கள் கேட்க விரும்புகிறோம்.

அப்படிப்பட்ட கொள்கை அறிவிப்புகளும், புதிய திட்டங்களும் எதுவும் இல்லாமல், தொடர்ந்து பல ஆண்டுக்காலமாக நடைபெற்று வருகின்ற வருவாய்க்குத் தக்க பல துறைகளுக்கு ஒதுக்கிடு செய்திருக்கிற இந்தத் தொகை அதிகப்பட்டிருக்கிறதேயல்லாமல், கழக ஆட்சிக்காலத்திலே என்ன நடைபெற்றது என்ற வினா எழுப்புகிறவர்களைப் பார்த்து நான் சொல்ல விரும்புவதெல்லாம், கழக ஆட்சிக்காலத்திலே அரசு அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த கொள்கை வழிநின்று பல திட்டங்களை ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும், கொள்கை அடிப்படையிலும் அறிவித்து, அதற்கேற்ப நிதி ஒதுக்கீடும் செய்திருக்கிறது என்பதை மாமன்றத்து உறுப்பினர்கள், இன்றைக்கு ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள், ஆளுங்கட்சியிலே இருக்கிறோம் என்ற காரணத்திற்காக மறுத்தாலும் கூட, அவர்களுடைய மனதிலே இவைகளெல்லாம் நிச்சயமாக நிழலாடாமல் இருக்கமாட்டா என்று சொல்ல விரும்புகிறேன்.

உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், 1968–69 ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்டோர், பின்தங்கியோர், ஆகிய இரண்டு சாரார் நலன்களுக்காக, ரூ. 6 கோடியே 51 இலட்சம் அளவிலே தான் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. அந்த ரூ. 6 கோடியே 51 இலட்சம் நிதி ஒதுக்கமும் பிற்படுத்தப்பட்டவர்களும், தாழ்த்

1978 மார்ச் 1] [திரு. மு. கருணாநிதி]

தப்பட்டவர்களும் என்று சேர்த்து ஒதுக்கப்பட்ட தொகை. அந்த ரூ. 6 கோடியே 51 இலட்சத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்று பார்த்தால், ரூ. 1 கோடியே 73 இலட்சம்தான். இதிலே, அரிசனங்களுக்கு அதிகமாகச் செலவிட்டார்கள், பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் குறைவாகச் செலவிடப்பட்டது என்கின்ற குறைபாட்டை நான் சொல்ல வரவில்லை.

அரிசனங்களுக்கும் இன்னும் அதிகமாகச் செலவிடவேண்டுமென்கிற அதே நேரத்தில், மக்கள் தொகையில் அவர்களைவிட அதிகமாகவுள்ள பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் அதிகமாகச் செலவிட வேண்டுமென்ற குறிக்கோளுடன் 1969-க்குப் பிறகு கழக அரசு தாழ்த்தப்பட்டோர் நலன், பிற்படுத்தப்பட்டோர் நலன் ஆகிய இரண்டு சமூகத்தாருக்கும் விரிவாகப் பணியாற்ற வேண்டுமென்ற ஒரு கொள்கை நோக்கோடு, ஒரு வழிமுறையை வகுத்து, அரிசன நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இரண்டையும் அன்றைக்கு இருந்ததை மாற்றியமைத்துத் தனித்தனி இலாகாக்களாக்கி, தனித்தனி இலாகாக்கள் ஆக்கியது மாத்திரமல்ல; அந்த இலாக்காக்களைத் தனித்தனி அமைச்சர்களிடம் ஒப்படைத்தோம். இன்னும் சொல்லப் போனால், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் என்கிற தலைப்பிலே ஒரு அமைச்சர் உருவாக்கப்பட்டு, அவரிடத்திலே வேறுசில இலாகாக்களும், பொறுப்புக்களும் கொடுக்கப்பட்டன என்பதை நாடு நன்கு அறியும்.

அப்படி இலாகாக்கள் பிரிக்கப்பட்டு அமைச்சர்களும் தனித்தனியாக ஆக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், பிற்படுத்தப்பட்டோர் நலன்களைக் கவனிப்பதற்கான ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவினுடைய பரிந்துரைகள் ஏற்கப்பட்டு, ரூ. 1 கோடியே 73 இலட்சம் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக 1969-ல் ஒதுக்கப்பட்டதற்குப் பதிலாக, 1975—76-ஆம் ஆண்டில் ஏறத்தாழ 6 கோடி ரூபாய் பிற்படுத்தப்பட்டோர் நன்மைக்காக ஒதுக்கப்பட்டது என்பதை இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1975—76-ல் தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக ரூ. 11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அன்றைக்குக் கழக அரசு பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் நலனுக்கு ஒதுக்கிய ரூ. 17 கோடி இன்றைக்கு ரூ. 25 கோடிய உயர்ந்திருக்கிறது என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது. நான் குறிப்பிடுவதற்கே காரணம், இது அரசினுடைய, அரசை இயக்கிய கழகத்தினுடைய தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் முன்னேற்றத்திலே கொண்டிருந்த கொள்கை அடிப்படையிலே, 1969-ம் ஆண்டு அறிவிக்கப்பட்ட ஒரு பிரகடனம். அதற்குப் பிறகு, தொடர்ந்து செய்யப்பட்ட சாதனை. அதன் காரணமாக, இன்றைக்கு நாட்டிலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஏற்பட்டுள்ள முன்னேற்றம், வளர்ச்சி, இவைகளுக்கு, அன்றைக்குக் கழக அரசு அடித்தளம் அமைத்தது என்பதை மறந்து விடக்கூடாது.

[பிற்பகல் 12—10]

மனு நீதித் திட்டம் என்ற ஒன்றைக் கழக அரசு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்து, 1969-லே அறிவித்து, மக்களுடைய குறைகளைக் கூடுமானவரையில் அந்தந்த இடத்திலேயே தீர்ப்பது என்பதற்கேற்ப கிராமங்களை நாடி அதிகாரிகள் சென்றார்கள்; ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக் கணக்கான மனுக்களைப் பெற்று அவைகளுக்கான தீர்வுகள் அங்கங்கே காணப்பட்டன.

அதை நான் சொல்வதை விட State Administra ion Report என்ற தலைப்பில் உள்ள புத்தகம் 1977 ஆம் ஆண்டு, குடியரசுத் தலைவர் ஆட்சியிலே அச்சேற்றப்பட்டது. நல்லவேளையாக, 1977-லே அச்சேற்றப்பட்டாலும் கூட, 1975—76 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வரையிலும், கழக அரசு புரிந்த சாதனைகள் எதையும் அந்த ஏடு மறைத்திடவில்லை. இன்றைக்குள்ள தலைமைச் செயலாளர் அவர்கள்தான் இதற்கு முன்னுரையும் கூட எழுதியுள்ளார். ஆனால் இவைகள் உறுப்பினர்களுக்கு வழங்கப் படாமல் 7, 8 பிரதிகளே காக்கப்பட்டிருக்கிறது, என்றும் அனைவருக்கும் வழங்கப் பட்டிருந்தால் கழக ஆட்சி அடித்தளத்து மக்களுக்கு, கிராமப்புற மக்களுக்கு, மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை எந்தெந்தத் வகையில் எல்லாம் ஆற்றிவந்தது என்கின்ற பேருண்மை மற்றவர்களுக்குத் தெரிந்து விடக்கூடாது என்ற காரணத்தால் மற்றவர்களுக்கு மறைக்கப்பட்டு விட்டது என்ற செய்தியும் உலவுகிறது. இது எந்த அளவுக்கு உண்மை என்பது எனக்குத் தெரியாது.

அந்த அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்டிலே, 1977 ஆம் ஆண்டிலே அச்சிடப்பட்ட அந்தப் புத்தகத்தில் கழக ஆட்சியில் வெளியான சாதனைகள் வரிசையாகத் தொகுத்து வெளியிடப் பட்டிருக்கிறது. அதில் ஆங்கிலத்திலே உள்ளதை அப்படியே தமிழில் நான் இங்கே படித்துக் காட்டுகிறேன்.

''1970 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஏற்படுத்தப் பட்ட குடிசை மாற்று வாரியத்தினுடைய குறிப்பின்படி, சென்னை நகரில் 1,202 குடிசைப் பகுதிகள் இருப்பதாகவும் அவைகளில் மொத்தம் 1,63,804 குடும்பங்கள் இருப்பதாகவும் அந்தக் குடும்பங்களிலே மொத்தம் $7\frac{1}{2}$ லட்சம் பேர்கள் வாழ்வதாகவும், அவர்களுக்காக 38,335 குடியிருப்புகளை கட்டுவதற்கு, 132 குடிசை மாற்று வாரியத் திட்டங்களில் கட்டுவதற்கு, $33\frac{1}{2}$ கோடி ரூபாய் அரசினால் வழங்கப் பட்டது. இது வரையில்—அதாவது மார்ச்சு 1976 வரையில் 183,85 குடியிருப்புக்கள் கட்டப்பட்டன. இன்னும் 3,044 குடிசைகள் கட்டப்படவிருக்கின்றன. ஆக மொத்தம் 21 ஆயிரம் குடியிருப்புக்கள் கட்டிமுடிக்கப்பட்டன.''

அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்தில் சென்னையில், திடீர் திடீரென்று குடிசைகள் தீப்பிடித்து எரிந்ததன் விளைவாக, அண்ணா அவர்கள், எரியாத வீடுகள் கட்டித்

தருகின்ற திட்டத்தை அமுல்படுத்தினார்கள். அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு, அந்தத் திட்டமும் மறுபரிசீலனை செய்யப்பட்டு, அதைவிட குடிசை மாற்று வாரியத்தின் மூலம் குடிசைவாழ் மக்களுக்கு, மாடி வீடுகள் கட்டித் தருகிற அந்தத் திட்டம், நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டு, அதற்கென்று கட்டப்பட்ட வீடுகள்தாம் அந்த 21 ஆயிரம் குடியிருப்புக்கள். நகரத்திற்குத்தானே செய்தீர்கள் கிராமங்களுக்கு என்ன செய்தீர்கள் என்று இந்தக் குறிப்பினை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பயன்படுத்த மாட்டார் என்று நாம் நம்புகிறோம்.

அதே அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்டிலே, 1974–75-ல் தாழ்த்தப்பட்டோர் நல வீட்டு வசதிக் கழகம் செயல்படத் தொடங்கி, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் வீடுகளைக் கட்டுவதற்காக, மாநில அரசால் கையகப்படுத்தப்பட்ட மனைகளைப் பெற்று, பல இடங்களில் முதல் கட்டமாக ஒரு லட்சம் வீடுகளை, 5 ஆண்டு காலத்திற்குள் கட்டுவதற்காக, திட்டம் வகுக்கப்பட்டு, நிதி நிலை அறிக்கையில் அறிவ்க்கப்பட்டதற்கிணங்க, 1975–76 ஆண்டு இறுதிக்குள், ஏறத்தாழ 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் அரிசனங்களுக்கு இலவசமாகக் கட்டித்தரப்பட்டது. அதே 1975–76 ஆண்டு ரிப்போர்ட்டில் இதுவும் கூறப்பட்டிருக்கிறது.

இந்த நேரத்திலே ஒன்றை நிதி அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். சென்ற நிதி நிலை அறிக்கையில் அவர் குறிப்பிட்டார். அரிசனங்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக அவர் அறிவித்தார். ஆனால் நான் விசாரித்து அறிந்து கொண்ட வகையில் அப்படி வீடுகள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை அந்த வாரியத்திற்கு அளிப்பதற்கான அரசாங்க ஆணை, இதுவரையிலே பிறப்பிக்கப்படவில்லை என்கிற வருந்தத்தக்க செய்தியினை நான் கேள்விப்பட்டேன். நிதி அமைச்சர், அரிசனங்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிவித்து 7 மாதங்கள் ஆகியும் அந்த வாரியத்திற்கு அந்தப் பணத்தை ஒதுக்குவதற்கான அரசாங்க ஆணை இது வரை 7 மாதங்களுக்குப் பிறகும் இன்னும் பிறப்பிக்கபட வில்லை என்பது பெரிய குறைபாடு. அதை நிதி அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவது என்னுடைய பெரிய கடமையாகும்.

[பிற்பகல் 12–20]

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

எனவே, கிராமங்களிலே இருக்கும் அரிசனங்களுக்கும், மீனவர்களுக்கும் இலவசமாக வீடு கட்டித் தருவது என்கின்ற கொள்கை வழித் திட்டத்தை உருவாக்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை மறந்துவிடக் கூடாது.

கிராமங்கள், சிறு கிராமங்கள், பெரு நகரங்கள் ஆகிய எல்லாப் பகுதிகளிலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியை பெருக்குவதற்காகத்தான் கழக அரசு குடிநீர் வாரியத்தை அமைத்து, விரிவான அளவில் அந்தப் பணியை நிறைவேற்றி இருக்கிறது. கிராமத்தைப் பற்றி நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் பல இடங்களில் குறிப்பிட்டு இருப்பதை ஆளும் கட்சி உறுப்பினர்களும், தோழமைக் கட்சி உறுப்பினர்களும் இங்கே எடுத்துக் காட்டி, எத்தனை இடங்களில் கிராமங்களைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள் என்று கூறி விட்டு, எங்களைப் பார்த்துக் கேட்டார்கள். நானும் அவர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

1971–1972 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில்—நான் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த காலம்—நான் நினைவூட்ட விரும்புகிற அந்த வாசகம்—'' பரந்து கிடக்கின்ற பல்லாயிரம் கிராமங்களிலும், பட்டினக் கரைகளிலும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் அளிப்பது என்பதை நோயற்ற வாழ்விற்கான அரு மருந்தாகக் கருதி, இந்த அரசு வேகமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற குடிநீர் திட்டம் ஒன்றை அமைத்துள்ளது,'' என்று அப்போதே குறிப்பிட்டு இருக்கிறேன்.

கிராமங்களை முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் கவனிக்கவில்லை என்று சொல்லுகிறார்களே, அதற்காக 1971 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டுள்ள வாசகத்தையும், அதன் தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சிகளையும் நான் இங்கே எடுத்துக் காட்டுவது என்னுடைய கடமையாகும் என்று கருதுகிறேன்.

1971–1972 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நான் குறிப்பிட்டுள்ள மற்றொரு வாசகத்தையும் நினைவூட்டுகிறேன். '' நகர் புறங்களின் வசதி வாய்ப்புகளை கிராமப்புறத்து மக்கள் ஒருகால கட்டத்திற்குள் பெற்றிட வேண்டும் என்னும் குன்றா ஆர்வத்துடன் செயல்படும் இந்த அரசு வெகு விரைவில் எல்லா கிராமங்களுக்கும் மின் ஒளியும், மின் வசதியும் கிடைத்திட முயற்சிகள் மேற் கொள்ளும்'' என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறேன்.

1973-1974-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூட '' கிராம முன்னேற்றம்'' என்ற தலைப்பில் நான் வெளியிட்ட வாசகங்களை நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். '' ஆயிரத்து ஐநூறு மக்களும் அதற்கு மேற்பட்டவர்களும் வாழ்கின்ற ஊர்களையும் இடையே உள்ள ஊர்களையும் முக்கிய சாலைகளுடன் சேர்க்கும் இணைப்புச் சாலைகள் அமைப்புத் திட்டம் ஒன்றைக் கடந்த ஆண்டு வரவு செலவு—திட்ட அறிக்கையில் நான் வெளியிட்டேன். இவ்வகையிலே 19 கோடி ரூபாய் அளவில் தீட்டப்பட்ட திட்டத்தின் கீழ் 1972–1973 ஆம் ஆண்டில் 3 கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன். இப் பணிக்கென 1973–1974 ஆம் ஆண்டிலும் 3 கோடி ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது ,'' என்று குறிப்பிட்டு இருக்கிறேன்.

1978 மார்ச் 1 [திரு. மு. கருணாநிதி]

எனவே, கிராமங்களுக்கு சாலை வசதித் திட்டம், குடிநீர் திட்டம், வீட்டு வசதி திட்டம், சுகாதார திட்டம், இவைகள் அத்தனையும் முன்பு இருந்த கழக ஆட்சி காலத்தில் துவங்கப்பட்ட திட்டங்கள் என்பதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, இத்தகைய நல்ல காரியங்கள் முந்தைய ஆட்சியில் நடைபெற்று இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், கிராமங்கள் கிராமங்கள் என்று பல இடங்களில் சொல்லப்பட்டு இருந்தாலும், கிராம வளர்ச்சி பற்றி பேசப்பட்டு இருந்தாலும், குறிப்பாக கிராமத்திட்டங்களை, இன்னின்ன காரியங்களைச் செய்தோம், செய்கிறோம், எந்த அளவிற்கு தொகை ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்ற விவரங்களை நிதி அமைச்சர் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்களா என்றால் இல்லை. எனவே, புதிய அறிவிப்புகள் எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை என்ற குற்றச் சாட்டை திராவிட முன்னேற்றக் கழகம் மாத்திரம் அல்ல மற்றும் உள்ள கட்சியின் தலைவர்களும் இங்கே எடுத்துக் காட்டி இருக்கின்றனர்.

குடியிருப்பு மனைகள் குடியிருப்பவர்களுக்குச் சொந்தமாக்கப்பட வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்தது திராவிட முன்னேற்ற கழகம். அது நகரங்களுக்கா, கிராமங்களுக்கா, என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தச் சட்டத்தின் மூலம் பயன் பெற்ற குடும்பங்கள் 1,28,000 குடும்பங்கள். அந்த 1,28,000 குடும்பங்களில் முக்கால் வாசிபேர் விவசாயிகள், தாழ்த்தப் பட்ட மக்கள் எஞ்சியோர் பிற்படுத்தப்பட்ட மக்கள். அந்தச் சட்டம் இயற்றப்பட்டு, அதற்கான செயல்படுத்தப்படுகின்ற விழா திருத்துறைப் பூண்டியில் நடத்தப்பட்டபோது மறைந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள் சொன்னார்கள். பல ஆண்டுகாலமாக சொந்த குடிசையில் படுத்துத் தூங்க வழி இல்லாத அரிசன பிற்படுத்தப்பட்ட மக்கள் இன்று இரவு இந்தக் கூட்டம் முடிந்ததும் வீட்டிற்குச் செல்லுகிற நேரத்தில் அப்பாடா, இன்று தான் சொந்தக் குடிசையில் தூங்கப் போகிறேன் என்று சொல்வார்கள் என்று உணர்ச்சிப் பெருக்கெடுக்க அவர் கூறிய வாசகத்தை நான் மறந்து விடுவதற்கு இல்லை. எனவே அந்தக் குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்க செய்யப்பட்ட அந்தச் சட்டம் கழகம் தன்னுடைய அகத்திலே கொண்டு இருக்கிற கொள்கையின்பால் விளைந்த சட்டம் என்பதையும் மறந்து விடக்கூடாது.

30 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று காங்கிரஸ் ஆட்சியில் உச்ச வரம்பு கொண்டுவரப்பட்டு, அது 15, ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் குறைக்கப்பட்டு, குறைக்கப்பட்டது மட்டு மல்ல; அதுவரை உபரியாக இருந்த நிலங்களை, அதற்கு முன்பிருந்த அரசு கையகப் படுத்தாத நிலங்களை, ஏறத்தாழ 30,000 ஏக்கரா நிலங்களை கையகப்படுத்தி, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு தகுதியுள்ளவர்களுக்கு அளித்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் என்பதை நினைவூட்டக்கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவிலேயே மின்வசதி இல்லாத கிர மங்களே இருக்கக் கூடாது என்று திட்டமிட்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றிய முதல் மாநிலம் தமிழ்நாடு தான் கழக ஆட்சிக்காலத்தில்.

அரியாணாவை சொல்வார்கள். அரியாணா தான் எல்லா கிராமங்களுக்கும் மின்வசதி அளித்தது என்று, அந்த அரியாணா வை நம்முடைய தமிழ் நாட்டுடன் கணக்கிட்டுப் பார்த்தால் தமிழ்நாட்டிலேயே இருக்கிற செங்கல்பட்டு மாவட்டம் அளவுதான் அரியாணா அதை மறந்துவிடக்கூடாது. முதல் மாநிலம் என்ற வரிசையில் அந்த அரியாணாவை முதலில் வைத்து, தமிழ்நாட்டை இரண்டாவதாக வைப்பது சரியாக இருக்கலாம். ஆனால் நிலப்பரப்பு சரியாகாது. அதை விட பல மடங்கு பெரிய அளவு கொண்ட தமிழ் நாட்டில் இன்னும் 1000 அல்லது 1500 கிராமங்கள் தவிர மற்ற எல்லா கிராமங்களுக்கும் மின்வசதி, அதிலும் குறிப்பாக 20,000-க்கு மேற்பட்ட அரிசன காலனிகளுக்கு மின்வசதி செய்து கொடுக்கப்பட்டது திராவிட முன்னேற்றக் கழக அரசில் தான்.

அவைகளை எல்லாம் மறந்துவிடாமல் நம்முடைய தலைமைச் செயலாளர் 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ஆம் தேதி வெளியிட்ட 1974-1975 ஆம் ஆண்டு ஸ்டேட் அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்டில் அதை வெளியிட்டார்கள். அதிலே ஆச்சரியம். அந்த அறிக்கையிலே கூட குடியரசுத் தலைவர் ஆட்சியில் தலைமைச் செயலாளர் திரு. கார்த்திகேயன் அவர்களுடைய முன்னுரையில்

"It is hoped that this publication will prove to be very useful, in that it contains a detailed account of the progress made by the State in all its developmental activities, particularly in the implementation of the Plan Schemes and the social welfare measures."

என்று மிக அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வெளியிடப்பட்டது குடியரசுத் தலைவர் ஆட்சியில், அந்த உரை கிழிக்கப்படாமல் வெளியிடப்பட்டது மகிழ்ச்சியளிக்கக்கூடியது. அது இங்கே மறைக்கப்பட்டிருந்தாலும் இந்த மாமன்றத்திலே இப்போது என்னுடைய உரையின்மூலம் வெளியிடப்பட்டிருக்கிறது என்ற முறையிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பஸ்களை தேசியமயமாக்க வேண்டுமென்று அந்தக் கொள்கை அண்ணா அவர்கள் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, பிறகு அண்ணா அவர்கள் மறைந்த பிறகு அது தீவிரமாக்கப்பட்டு, பெரிய பஸ் அதிபர்களின் ஸ்தாபனங்கள், நிறுவனங்கள் கைப்பற்றப்பட்டு, டி. வி. எஸ்., ராமன் அண்டு ராமன், ஏ. பி. டி., போன்ற பெரிய கம்பெனிகளை அரசு ஏற்று, தந்தை பெரியார், அண்ணா கட்டபொம்மன், சேரன், சோழன், பாண்டியன் பல்லவன் ஆகியோர் பெயரால் போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்.

இன்றைக்கு திரு மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள். அரசு ஊழியர்களுக்கு குடும்ப பாதுகாப்பு நிதி அளிப்பது பற்றிக் கூறினார்கள். பணிக் காலத்தில் மறைந்து விட்ட அரசு ஊழியர்கள் குடும்ப பாதுகாப்பு நிதியாக 10,000 ரூபாய் தருவது என்ற மிக அருமையான திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் அறிமுகப் படுத்தியது என்பதை மறந்துவிடுவதற்கில்லை. ஆக, நகரங்கள், சிறு நகரங்கள், கிராமங்கள், பட்டித் தொட்டிகளில் வாழும் மக்கள், அடித்தளத்திலே இருக்கிற மக்கள் அனைவருக்கும் பயன்படக்கூடிய இந்தக் காரியங்கள் ஏதோ இன்றைக்கு கேலி செய்யப்படுகின்றவைகளாக இருந்தாலும் அவைகள் மறைக்கப் படக் கூடிய காரியங்கள் அல்ல. இன்று அவைகளைத்தான் இந்த அரசு தொடர்ந்து செய்து வருகின்றது. சிலவற்றை அவர்கள் மந்தப் போக்கிலே செய்து வந்தாலும் அவைகளை கைவிட்டுவிட முடியாத அளவில் செய்து வருகிறார்கள்.

நிதியமைச்சர் கூட திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்த சில காரியங்களைத் தொடர்ந்து நிறைவேற்றுவோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. ஆனால் அதோடு நிறுத்திவிடாமல் ஒவ்வொரு கட்டத்திலும் புதிய புதிய திட்டங்கள் அடித்தளத்து மக்களுக்கு சென்றடைய வேண்டுமென்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அவைகள் இந்த அறிக்கையிலே காணப்படவில்லை என்பதை கழகத்தின் சார்பாக வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சரி, சென்ற அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட அல்லது கவர்னர் உரையிலே அறிவிக்கப்பட்ட திட்டங்களாவது நிறைவேற்றப்படும் திட்டங்களாக இருக்கின்றனவா என்றால் இல்லை. 16,000 நியாய விலைக் கடைகள் திறக்கப்படும் என்று — கவர்னர் சென்ற ஆண்டு அறிவித்தார்கள். இப்போது கவர்னர் உரை இல்லாமல் இருப்பதற்கு காரணம், ஒருவேளை கவர்னர் ஆற்றிய அந்த உரை நினைவிற்கு வந்து, அந்த 16,000 நியாயவிலைக் கடைகள் எங்கே என்று கேட்டுவிடுவார்களோ என்பதற்காக நம்முடைய திறமையான நிதியமைச்சர், அதை (avoid) 'அவாய்ட்' செய்துவிட்டாரோ என்று கருதுகிறேன்.

(பிற்பகல் 12-30).

16,000 நியாயவிலைக் கடைகள் அறிவிக்கப்பட்டு பிறகு ஏழெட்டு மாதங்களாகியும் பலமுறை இந்த மன்றத்தில் அது பற்றி கேட்கப்பட்டு நம் முதல் அமைச்சர் அவர்கள் அப்போது சொன்னார்கள். இந்தச்சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்ததும் வெளியே சென்று அதிகாரிகளை அழைத்து அந்த 16,000 நியாய விலைக் கடைகளைத் திறக்கும் வேலைதான் முதல்வேலை என்று அவர்கள் சொன்னார்கள். அதிலுள்ள கஷ்டங்களைப் பற்றி நாங்கள் ஆக்கபூர்வமாக எடுத்துச் சொன்னோம். அப்போது எல்லாம் அதிகாரிகளைக் கலந்து கொண்டுதான் செய்திருக்கிறோம், எதிர் கட்சித் தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்கள் அதைப்பற்றி கவலைப்படத் தேவையில்லை என்று அன்று சொன்னார்கள்,

ஆனால் சொல்லி ஏழெட்டு மாதங்கள் உருண்டுபோய்விட்டன. 16,000 நியாய விலைக்கடைகளில், நெல்லை மாவட்டத்தில் 400 நியாயவிலைக் கடைகள் வரும் என்று உணவு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். அங்கும் நியாயவிலைக் கடைகள் வந்ததாகத் தெரியவில்லை. இப்போது மிக ஜாக்கிரதையாகச் சொல்லி விட்டார்கள். நியாயவிலைக் கடைகள் இல்லாத கிராமங்களில் எல்லாம் நியாய விலைக்கடைகள் ஏற்படுத்தப்படும் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்ன பொருள் என்றால் ஏற்கனவே கூட்டுறவு சொஸைட்டிகள் மூலம் இருக்கிற கடைகளை யெல்லாம் எண்ணிக்கையில் சேர்த்துக் கொண்டு மிச்சமுள்ள கடைகளை வைப்பதற்கு அதில் உத்தேசித்திருக்கிறார்கள் என்று கருது கிறேன்.

அதிகாரிகளின் திறமையை நானும் ஏழாண்டுகளாக முதல் அமைச்சராக இருந்த முறையில் அறிவேன். ஆகவே அதிகாரி களின் திறமையும் நிதி அமைச்சர் அவர்களுடைய வாக்கு சாதுர்ய மும் இரண்டும் சேர்ந்த வாசகமாக மாறி அந்த 16,000 என்ற எண்ணிக்கையை மிகத் தந்திரமாக திரை போட்டு மறைத்திருக் கிறது. அப்படி மறைப்பதற்காக எங்கள் பாராட்டுதல்களைச் சொல்லவேண்டுமே தவிர 16,000 நியாயவிலைக் கடைகள் எங்கே என்று கேட்கிற நேரத்தில் நான் பாராட்ட முடியாதவனாக இருக் கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நிதி அமைச்சர் அவர்கள் தனது அறிக்கையில் நம்முடைய மாநில நிதி ஆதாரங்களைக் குறிப்பிடுகிற நேரத்தில் மதுவிலக்கை இன்று செயல்படுத்துகிற தன்மையால் 140 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு நமக்கு இழப்பு ஏற்படுகிறது, அதை மத்திய அரசாங்கம் தரவேண்டும் என்கின்ற கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள். இது இன்று நேற்றல்ல. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக பொறுப்பேற்றிருந்த அந்தக் காலத்திலும், இப் போதும் வலியுறுத்தப்படுகிற ஒரு கோரிக்கையாக இருந்து வரு கிறது. 140 கோடி ரூபாய் மதுவிலக்கு நிறைவேற்றுகிற மாநிலத்திற்கு நஷ்டயீடாக, இழப்பீடாக தர வேண்டும் என்று கேட்கிற கோரிக்கை நியாயமான கோரிக்கை. அந்தக் கோரிக்கை யில் திராவிட முன்னேற்றக் கழகமும் இந்த அரசு சார்பில் தன்னுடைய குரலைக் கொடுக்கத் தயாராயிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் கவர்னர் அவர்கள் பேசியதாக ஒரு கருத்து வெளி வந்தது. நம் முன்னாள் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள்கூட பேசியதாக ஒரு கருத்து வெளிவந்தது. ஏற்கெனவே மதுவிலக்கிற்காக விற்பனை வரி என்ற ஒரு பெரிய காமதேனுவை உற்பத்தி செய்திருக்கிறார்களே, அந்த காமதேனு வந்த பிறகு இதற்காக ஏன் மத்திய அரசாங்கத்தினிடம் பணம் கேட்கிறீர்கள் என்று குரல் எழுப்புகிறார்கள். உண்மை. விற்பனை வரியை ராஜாஜி அவர்கள் கொண்டுவந்து மதுவிலக்கினால் ஏற்படுகிற

இழப்பிற்கு நஷ்டயீடு கட்டத்தான். ஆனால் மதுவிலக்கு இருக்கிற மாநிலங்கள் மாத்திரமல்லாமல் ராஜாஜி அவர்களுடைய வழியைப் பின்பற்றி மதுவிலக்கில் நீண்ட அக்கறை இருப்பவர்கள் மாத்திர மல்ல, அந்த மாநிலங்களும் விற்பனை வரியை இன்றைக்கு அனுப வித்துக் கொண்டு இருக்கிறார்கள். கள்ளுக்கடைகள் இருக்கிற கர்நாடகாவிலும் விற்பனை வரி இருக்கிறது. கள்ளுக்கடைகள் இருக்கிற ஆந்திராவிலும் விற்பனை வரி இருக்கிறது. கள்ளுக் கடைகள் இருக்கிற மேற்கு வங்கத்திலும் விற்பனை வரி இருக் கிறது ஆக, அவர்கள் எல்லாம் கள்ளுக்கடைகளும் வைத்துக் கொள்வார்களாம், விற்பனை வரியையும் அனுபவித்துக்கொள்வார் களாம். இங்கே நாம் கள்ளுக்கடைகளை அகற்றிவிட வேண்டுமாம், ஆனால், விற்பனை வரியை வைத்துக்கொண்டு அதைச் சரிக்கட்ட வேண்டுமாம் என்ற அந்த வாதம் பொருந்தாத வாதமாகும்.

ஆகவே மதுவிலக்கினால் ஏற்படுகிற இழப்பைச் சரிக்கட்டுவதற்கு மத்திய அரசு தமிழக அரசுக்கு, எங்கெங்கு மதுவிலக்கு அமல் படுத்தப்படுகிறதோ அந்த மாநில அரசுகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதுதான் நியாயமாகும் என்பதை எடுத்துச் சொல்வதன் மூலம் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கு பெரு மகிழ்ச்சி ஏற்படும் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், நாம் எழுப்பிய அதே கோரிக்கையை ஆனால் ஒன்றை மறந்துவிடக் கூடாது — நாங்கள் இந்தக் கோரிக்கையை எழுப்பிய நேரத்தில் இன்றைக்கு ஆளும்கட்சியாக இருக்கிற அண்ணா தி.மு.க. வினர் பக்தவத்சலம் அவர்களுடைய வாதத்தை எடுத்து வைக்கத் தவற வில்லை. விற்பனை வரியால் வரக்கூடிய வருமானத்தைக் கொண்டு அந்த இழப்பை சரிக்கட்டிக்கொள்ளக் கூடாதா என்ற வாதங்களை சில நேரங்களில் பேசியிருக்கிறார்கள். அப்படிப் பேசியிருந்தாலும் மாநில நன்மை கருதி அதில் போட்டாபோட்டி காட்டா குஸ்தி என்று இல்லாமல் அதற்காக பழிக்குப்பழி என்று இல்லாமல் மாநில உரிமை கருதி நீங்கள் கோருகிற அந்தக் கோரிக்கை நியாயமானது என்பதை நான் இங்கே வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மத்திய மாநில உறவுகள் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் அதிகமாகக் கோடிட்டு காட்டவில்லை என்பதை நம்முடைய எதிர் கட்சிதுணைத்தலைவர் பேராசிரியர் அவர்களும் நண்பர் சங்கரய்யா, நண்பர் உமாநாத் போன்றவர்களும் பேசும்போது எடுத்துச்சொன் னார்கள். மத்திய மாநில உறவுகள் பற்றி என்ன பேச வேண்டும், என்ன எழுதவேண்டும், என்ன சொல்ல வேண்டும், என்பதை இம்மாமன்றம் திராவிட முன்னேற்றம் கழகம் ஆட்சி பொறுப்பில் இருந்தநேரத்தில் ஒரு தீர்மான வடிவிலே கொடுத்திருக்கிறது. மாநில சுயாட்சித் தீர்மானம் நாலைந்து நாட்களாக விவாதிக்கப் பட்டு அந்தத் தீர்மானம் இங்கே பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கும் அனுப்பி வைக்கப்பட் டிருக்கிறது.

[திரு. மு. கருணாநிதி] [1978 மார்ச் 1

இன்றைக்கு ஷேக் அப்துல்லா, ஜோதிபாசு, பாதல் போன்றவர்கள் எல்லாம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று சொல்லுகின்றார்கள், அவர்கள் மட்டுமல்ல, மீண்டும் இன்றைக்கு கர்நாடகத்தில் முதலமைச்சராக வந்திருக்கிற தேவராஜ் அர்சும் கூட கூறுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையைச் சுட்டிக்காட்டித்தான் மாநில சுயாட்சி கோரிக்கையை நாம் வலியுறுத்தினோம். எப்பொழுதும் மத்தியிலே ஒரே கட்சி ஆட்சியும் மாநிலங்களில் ஒரே கட்சியினுடைய ஆட்சியும் இருக்கின்ற நேரத்தில், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, காரியங்கள் நடைபெறக்கூடும். ஒருவரை ஒருவர் இணைந்து போய்விட முடியும்.

ஆனால் இன்றைக்கு இந்தியாவின் நிலைமை என்ன? மத்தியிலே ஜனதா ஆட்சி, மேற்கு வங்காளத்தில் மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி, தமிழகத்தில் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சி, கேரளத்தில் கூட்டணி ஆட்சி, பஞ்சாபிலே அகாலிதளத்தின் ஆட்சி. இப்படி மத்தியில் ஒரு குறிப்பிட்ட கட்சியினுடைய ஆட்சியும், நான்கைந்து மாநிலங்களில் வேறு கட்சிகளின் ஆட்சிகளும் நடைபெறுகின்ற நேரத்தில் தான் மாநில சுயாட்சியின் பெருமையை உணர முடியும். இந்திரா காந்தி அம்மையாரே இன்றைக்கு மீண்டும் மத்தியிலே வீற்றிருப்பார்களேயானால் தேவராஜ் அர்சு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற குரலை இவ்வளவு பலத்த குரலில் எழுப்பியிருக்கமாட்டார். அவருக்கே தலைவலி என்று வந்த பிறகு தான் மத்திய சர்க்காரை எதிர்த்து ஒரு அறிக்கை விட முடிந்தது. மாநில சர்க்காரைக் கேள்வி கேட்க மத்திய சர்க்காருக்கு என்ன உரிமை இருக்கிறது? மாநில சர்க்கார் மீது புகார் கூறப்பட்டால் அதைப் பற்றி விசாரிக்க மத்திய அரசுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்ற கேள்வியை அவருக்கே ஒரு சங்கடம் வந்தபோது தான் அறிவிக்க முடிந்தது.

ஆனால் எங்களுக்குச் சங்கடம் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, மாநில சுயாட்சி தேவை என்று கேட்பது எங்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களுக்கும் மாநில சுயாட்சி தேவை என்ற காரணத்தினால் தான் இந்த நிலை வந்தது. ஆகவே மற்றவர்களைப்போல் சங்கடம் வந்த பின்னால் நாங்கள் மாநில சுயாட்சி கேட்கவில்லை. மாநில சுயாட்சி கேட்டு எங்கள் உரிமைகளை வற்புறுத்திய காரணத்தினால் தான் எங்களுக்குச் சங்கடமே வந்தது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

மாநில சுயாட்சி கேட்கும்போது இது பிரிவினையிலே கொண்டு போய் விடுமோ என்று நாங்கள் அஞ்சுவதால், அதன் காரணமாகத்தான் நாங்கள் மாநில சுயாட்சியை ஆதரிக்கவில்லை என்றெல்லாம் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். வேறு பலரும் பேசினார்கள்.

முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், இது ஒரு பிரிவினை கோஷம்; எனவேதான் நாங்கள் இதை ஆதரிக்க வில்லை என்று அன்றும் சொன்னார்கள், இன்றும் சொல்கிறார்களோ என்னவோ தெரியவில்லை.

முதலமைச்சராக வீற்றிருக்கின்ற நண்பர் எம். ஜி. ஆர் அவர்கள் எதிர்க் கட்சியாக இருந்த காலத்தில் பல கூட்டங்களில் ''நாங்கள் விரும்புவது மாநில சுயாட்சியல்ல. மக்கள் சுயாட்சி'' என்று சொன்னார்கள். அது என்னவென்று எங்களுக்குப் புரியவில்லை. காலம் வரும்போது புரிய வைப்பார் என்று கருதுகிறேன்.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சி கேட்பது மறை முகமாகப் பிரிவினை உணர்ச்சி என்று சொல்லுகின்றவர்களுக்கு ஆப்பு அடித்ததுபோல், ஆணி அறைந்ததைப் போல் என்னுடைய அருமை நண்பர் மனோகரன் அவர்கள், அவருடைய மணிவாசகத் தமிழில் எழுதிய கட்டுரை ஒன்றைப் படித்துக் காட்ட விரும்புகிறேன். 'தென்னகம்' பத்திரிகையில் எழுதப்பட்டு 'அரசியல் அலைகள்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட கட்டுரை, நான்தான் இதை வெளியிட்டேன் என்று நினைவு. அது என்ன கட்டுரை, அதில் என்ன எழுதியிருக்கிறார். ''நாஞ்சிபாளையத்தில் நடைபெற்று முடிந்து விட்ட தி.மு.க. மாவட்ட மாநாட்டில் பேசிய பேச்சாளர்களில் பெரும்பாலோர் மாநில சுயாட்சிக் கோரிக்கையை வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை ஒப்புக் கொள்ளப்படாவிட்டால் பழைய 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற லட்சியத்திற்குப் புத்துயிர் தருவோம் என்று பேசியதாக சில பத்திரிகைகள் விஷமப் பிரச்சாரம் புரிந்திருக்கின்றன. (இன்றைக்கு அப்படி யாராவது சொன்னால் அது விஷம பிரச்சாரம் தான் என்பது இன்றைய நிதி அமைச்சரின் அன்றைய தீர்ப்பு....)

''மாநாட்டிலே பேசிய பொதுச் செயலாளர் நாவலர் அவர்கள் தி.மு.க. கோரும் மாநில சுயாட்சிக் கோரிக்கை பிரிவினை வாதம் அல்ல'' என்றார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசும்போது அதிகப்படியான அதிகாரங்களைக் கோரும் அல்லது அளவுக்கு மீறி மத்தியில் குவிக்கப்பட்டுக் கிடக்கும் அதிகாரங்களைப் பரவலாக்கும் கோரிக்கைக்கு பிரிவினை முலாம் பூசாதீர்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். இது தமிழகம் ஒன்றுக்கே உரித்தான தனிக் குரல் அல்ல என்றும், ஆகையினாலே தி.மு.க.வைத் தனிமைப் படுத்துகிற முயற்சியினின்று தரங்கெட்ட அரசியல்வாதிகள் விலகிக்கொள்ள வேண்டிய நியாயத்தை வலியுறுத்தியிருக்கின்றார். 'செல்ப் ஆட்டோனமி' என்பதற்கும் 'செல்ப் டிட்டர்மினேஷன்' என்பதற்கும் இருக்கின்ற இடைவெளியை இணைக்க முடியாத தொலை தூரத்தைச் சுட்டிக்காட்டி இந்த நியாயமான மாநில சுயாட்சி கோரிக்கையை கூர்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

கிளறிவிடும் அரசியல் மஞ்சள் பத்திரிகைகள் ஏதோ ஓர் போராட்டத்துக்கே மத்திய சர்க்காரோடு தி.மு.க. தயாராகி விட்டது போலவும் தளநாயகன் கலைஞர் கருணாநிதி ஓலை அனுப்பி விட்டதைப் போலவும் ஆர்ப்பாட்ட போர் பாட்டைப் பாடி தடந்தோள் தட்டிக்கொண்டு தானைத் தலைவர்கள் முன் நடக்க, தமிழர் படையினர் பன்பற்றிச் செலவதைப் போலவும், எந்த நேரத்திலும் போர் வெடிக்கலாம் : போர் மேகங்கள் குவிகின்றன என்ற வகையில் விளக்கங்கள் தந்து கொண்டிருப்பது வேதனைக் குரியது.''

[பிற்பகல் 12-40]

(மாண்புமிகு பேரவை தலைவர் தலைமை)

மாநில சுயாட்சி என்பது குறிப்பிட்ட மாநிலத்தோடு அடங்கி விடுகின்.ற பிரச்சினை அல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாநில கட்சியின கண்ணோட்டம் அகில இந்திய அளவுக்கு உயர்ந்து கூர்மை பெற்றதற்குப் பிறகு, நம் வரைக்கும் சுயாட்சி கேட் போம், மற்றவர்கள் வந்தால் என்ன, வராவிட்டால் என்ன, என்ற பொறுப்பற்ற போக்கினை மேற்கொள்ள மாட்டோம் என் பதை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். மாநில சுயாட்சிப் பிரச்னையில் திராவிட முன்னேற்றக் கழகத்தை தனிமைப்படுத்தும் முயற்சியும், அதன் மூலம் அவை ஆட்சிப் பொறுப்பிலிருந்து இறக்கிவிடும் முயற்சியும் நடை பெறுவதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. கருத்துக் குருடர்களும், அரசியல் கோமா ளிகளும் [இது அவருக்கே (நண்பர் மனோகரனுக்கு) உரித்தான வார்த்தைகள்] சிந்தனைக் குழப்பவாதிகளும், குதர்க்கவாதிகளும் ஐக்கிய முன்னணி அமைக்க தலைப்பட்டு விட்டனர். எந்தெந்தக் கட்சிகள் கடந்த காலத்தில் மாநில சுயாட்சிக்காகப் போரிடு வோம், உடம்பிலே ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரை அய ராது படை நடத்துவோம் என்று பேசியதோ, அதே அகில இந் தியக் கட்சிகளிலே சில நிலை தடுமாறி, மாநிலங்களுக்கு மாநிலங் கள் சுயாட்சிக் கொள்கையைப் பொறுத்து முரண்பட்ட மோதிடும் விளக்கங்களைத் தருவதையும் பார்க்கிறோம் என்றெல்லாம் சொல்லி விட்டு, 'இத்தனைத் தெளிவான விளக்கத்திற்குப் பிறகும் உண் மையை ஒப்புக்கொள்வதற்கு யாருக்காவது தயக்கம் வருமானால் அது ஒரு வகையான நோயின் அறிகுறி என்றே நான் கருது கிறேன்'.

இவைகள் எல்லாம் நான் பாராட்டுகின்ற நம்முடைய நிதி அமைச்சர் மனோகரன் அவர்களுடைய மின்வெட்டுச் சொற்கள். அன்றைய தினம் 'தென்னகம்' பத்திரிகையிலே அவர்கள் எழுதிய யதைத்தான் நான் இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறேன். நான் அவர்களை அன்றைக்குப் புகழ்ந்திருக்கலாம். இன்றைக்கு மாற்றிக் கொண்டிருக்கலாம். அதேபோல், அவர்கள் அன்றைக்கு

என்னைப் புகழ்ந்திருக்கலாம். இன்றைக்கு மாற்றிக் கொண்டிருக்கலாம். அதேபோல் இன்றைக்கு நான் அவர்களை மேடையிலே தாக்கலாம்; அவர்கள் என்னை மேடைகளிலே தாக்கலாம். அது வேறு வகையான விவகாரம். ஆனால், அவர்களும், நானும் சேர்ந்து ஒத்துக் கொண்ட ஒரு கொள்கைக்காக, எவ்வளவு அழுத்தம் திருத்தமான கருத்துக்களை எனது அருமை நண்பர் நிதியமைச்சர் மனோகரன் அவர்கள் அன்றைக்கு எடுத்து வைத்தாரோ, அதிலே இருந்து ஏன் இப்போது பாதை மாற வேண்டுமென்பதுதான் எனக்குப் புரியவில்லை.

எனவேதான், மாநில சுயாட்சி பிரச்சினையில் இன்றைக்குள்ள அரசை திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தை வலுப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள மாட்டேன். அது முறையாகாது. அவர்கள் ஆளும் கட்சி: நாங்கள் எதிர்க் கட்சி, நீங்களும் சேர்ந்து ஜோதி பாசு, சேக் அப்துல்லா, மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, பாதல் ஆகியவர்களோடும் சேர்ந்து குரல் கொடுப்பீர்களானால், உங்களை அரவணைத்து உங்களுக்குத் துணையிருக்க திராவிட முன்னேற்றக் கழகம் தயங்காது என்பதை மாத்திரம் இந்த மாமன்றத்திலே நான் சூளுரைத்துச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாநில சுயாட்சி தீர்மானம் வந்தபோது, நீங்கள் ஆட்சியிலே இருக்கின்ற காரணத்தினால், அது வரையிலே மாநில சுயாட்சி வேண்டாம் என்று நண்பர் எட்மண்ட் போன்றவர்கள் அப்போது பேசினார்கள். நான் குறுக்கிட்டுக் கேட்டேன். நீங்கள் ஆட்சிக்கு வந்தால் ஏற்றுக்கொள்வீர்களா என்று கேட்டேன். பார்க்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் இப்போது ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். இப்போதாவது இந்த மாநில சுயாட்சி கொள்கையை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் உங்களை யெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வரவு செலவுத் திட்ட விவாதத்திலே, முதலிலே நான் சில விவரங்களை எடுத்துச் சொல்லி, பிறகு மாநில மத்திய உறவுகளைப் பற்றிய விவரங்களை எடுத்துக் கூறுவதோடு அமையாமல் இங்கே பேச வேண்டாம் என்று ஒரு சில விஷயங்களைப் பற்றிப் பேசுமாறு, என்னுடைய நண்பர் இராகவானந்தம் அவர்கள் காலையிலே சில கேள்விகளுக்குப் பதில் சொல்கின்ற நேரத்தில் என்னை உசுப்பி விட்டிருக்கிறார்கள். நான் குறிப்பு வைத்திருந்தேன். இருந்தாலும் பேச வேண்டாம் என்றிருந்தேன். ஆனால், காலையில் அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, திரு. ப. உ. சண்முகமும், திரு. மன்னை நாராயணசாமியும் குடிசை மாற்று வாரியத்தில் ரொம்ப முறைகேடாக நடந்து கொண்டார்கள் என்று கேள்விக்கு பதில் அளிக்கின்ற நேரத்தில் தேவையில்லாமல் காலையிலே குற்றஞ் சாட்டினார்கள். யாரோ ஒரு நகரசுத்தி தொழிலாளருக்கு கோயம் புத்தூரிலே ப.உ.ச. அவர்கள் குடிசை மாற்று வாரியத்திலே ஒரு

வீடு கொடுக்கச் சிபார்சு செய்து விட்டார்கள் என்று அதைப் பெருங்குறையாக எடுத்துச் சொன்னார்கள். அதை ப.உ.ச. அவர்களும் இங்கே மறுத்தார்கள். அதற்கான விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

நான் கேட்பதெல்லாம் கடந்த 7 மாத காலமாக தமிழகத்திலே இந்த அரசு புரிந்த சாதனைகளை நீங்கள் எடுத்துச் சொல்வதற்குப் பதிலாக, கடந்தகால திராவிட முன்னேற்ற கழக அரசு பற்றிப் பேசுவதிலேயே அதிக நேரம் செலவழிக்கிறீர்கள்.

இன்னொன்றையும் சொல்கிறேன். அமைச்சர்கள் அடிக்கடி சவால் விடாதீர்கள்; அது நல்லதும்கூட அல்ல. எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் கொஞ்சம் கடுமையாகக்கூட பேசி விடலாம். பொறுப்பிலே இருக்கின்ற அமைச்சர்கள் அடிக்கடி சவால் விடுவதும், பிறகு பதில் சவால்கள் எதிர்க் கட்சியினர் விடுவதும் நல்லதல்ல. இன்னும் சில அமைச்சர்கள் இருக்கிறார்கள். மேடைகளிலே என்ன பேசுகிறார்கள் என்பதையெல்லாம் பத்திரிகைக் குறிப்புகள் மூலம் அவையின் முன்னவர் அவர்களும் அறிந்திருப்பார்கள். முதல் அமைச்சர் அவர்களும் அறிந்திருப்பார்கள். ஆகவே, இந்த விளக்கங்களுக்குக் கெல்லாம் செல்ல இப்போது நான் விரும்பவில்லை. ஆனால், 7 மாத காலமாக ஆட்சியை நடத்தத் தொடங்கிய பின், பழைய ஊழலைப் பற்றி புகார்களைப் பற்றி, சர்க்காரியா பற்றி நாள் தோறும் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

நான் உங்களுக்கு இந்திராகாந்தி மொழியில் அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்றால், திருச்சி மாநாட்டில் பேசிய இந்திரா காந்தி அம்மையார் சொல்லியிருக்கிறார்—'என்னோடு இருக்கும் வரையில் அவர்கள் எல்லாம் ஊழல் பேர்வழிகள்; அவர்களுடைய கட்சிக்குப் போய்விட்டால் புனிதமானவர்களாகிவிடுகிறார்கள்' என்று சொல்லியிருக்கிறார்கள். போன வருடம் நான் சொன்னதை இந்த வருடம் இந்திரா காந்தி அம்மையார் சொல்லுகிறார். போன வருடம் எனக்கு சர்க்காரியா: இந்த வருடம் அவருக்கு ஷா. இப்படிக் கமிஷன்கள் மாறி மாறி வந்த பிறகு மனோ நிலைமையும் மாறி மாறி வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற வரை அவர்கள் ஊழல் பேர்வழிகள், விசாரணைக்குரியவர்கள்: இங்கிருந்து அங்கு வந்து விட்டால் அவர்கள் நல்லவர்களாக, உத்தமர்களாக, புத்தர்களாக ஆகிவிடுகிறார்கள்.

54 குற்றச்சாட்டுகள் திராவிட முன்னேற்றக் கழக அரசு பற்றிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 28 குற்றச்சாட்டுகளுக்கான அறிக்கையில் முதல் பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மிச்சமுள்ள பகுதிக்கு விரைவில் கொடுக்கப்பட இருக்கிறது. அதைப் பற்றி நாள்தோறும் அமைச்சர் பெருமக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நல்லவேளை இப்போது சட்ட மன்றம் நடைபெறுவதால் பேச வாய்ப்பில்லாத காரணத்தால் பேசாமல் இருக்

கிறார்கள். இது முடிந்தவுடன் மீண்டும் ஆலாபனங்களை ஆரம்பிக்கிறோம் என்ற அந்த அளவுக்குப் பேசுகிறார்கள். நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்வதெல்லாம்—28 குற்றச்சாட்டுகளுக்குச் சர்க்காரியா தன்னுடைய அறிக்கையை அறிவித்திருக்கிறார். மிச்சமுள்ள குற்றச் சாட்டுகளுக்கு என்ன செய்ய போகிறீர்கள்? நீங்களே அவைகளை கைவிட்டு விட்டீர்களா? அந்த 28 குற்றச்சாட்டில் சாரம் இல்லையா? வேண்டுமென்றே கொடுத்தோம் என்று பகிரங்கமாக அறிவிக்கப் போகிறீர்களா? அல்லது நீங்களே கமிஷன் போட்டு விசாரிக்கப் போகிறீர்களா? அந்தக் கமிஷனுக்குக் குற்றச்சாட்டு கொடுத்த நீங்கள் வாக்குமூலங்களை அளிக்கத் தயாராக இருக்கிறீர்களா ? இவைகளுக்கெல்லாம் நாடு உங்களிடத்திலிருந்து பதிலை எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறது.

அது மாத்திரமல்ல. நண்பர் ஜேம்ஸ் அவர்கள் கூடப் பேசினார்கள். மற்றவர்களைக் குற்றம் சொல்லுகிற நேரத்தில், கடந்த காலத்தில் இருந்த ஆட்சியின் தவறுகளை எடுத்துச் சொல்லுகிற நேரத்தில் அவற்றைத் திருத்தும் வாய்ப்பைப் பெற்று நீங்கள் சரிவரச் செய்திருக்கிறீர்கள் என்றால் இல்லை.

திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னதைப் போல் புயல் நிவாரண நிதிக்கு நட்சத்திர இரவு நிகழ்ச்சி நடத்தப்பட்டிருக்கிறது. வேண்டாமென்று சொல்லவில்லை. எப்படி அதற்கான நிதி வசூலிக்கப்பட்டது? பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி தரவேண்டியதுதான். நான்கு கோடி ரூபாய்க்கு மேல் மக்கள் தந்திருக்கிறார்கள். இதிலே இரண்டு கோடி ரூபாயோ, ஒன்றரைக் கோடி ரூபாயோ கிடைத்திருக்கிறது. ஆனால் அது வசூலிக்கப்பட்ட முறை என்ன? முதலமைச்சர் அவர்கள் மதுரையிலேயோ வேறு ஒரு நிகழ்ச்சியிலேயோ பேசுகிற நேரத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். "அதிகாரிகள் தவறு செய்தார்கள் இந்த நிதி வசூலில் என்று யாராவது சொன்னால் அதற்காக யாரும் அதிகாரிகள் கவலைப்பட வேண்டாம்; நானே அதற்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன்; என்ற அளவுக்கு முதலமைச்சர் பேசியிருக்கிறார், இதோ ஒன்றைப் படிக்கிறேன்.

'நகராட்சி அலுவலகம் சேலம்.'

சி. 11–4280/78 என்ற எண்ணுள்ள சுற்றறிக்கை. நாள் 6–2–1978.

பொருள் : நட்சத்திர இரவு—புயல் வெள்ள நிவாரண நிதி—நன்கொடை வசூல்—குறித்து.

பார்வை : இவ்வலுவலக 27–1–1978 தேதிய சி. 11–4280/78 எண். சுற்றறிக்கை.

'நட்சத்திர இரவு' நிகழ்ச்சி நடத்தி புயல் வெள்ள நிவாரண நிதிக்கு நிதி வசூலிக்க நன்கொடை டிக்கட்டுகள் ஒவ்வொருவருக்கும் குறியீடு நிர்ணயித்து 31–1–1978-ல் வழங்கப்பட்டது.

டிக்கட்டுகள் வழங்கி ஒரு வாரம் ஆகியும் நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டில் 10% கூட எந்த ஒரு பிரிவும் வசூலிக்காதது, வருந்தத்தக்கதாயுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு டிக்கட் கூட விற்காமல் திருப்பித் தரக்கூடாதென கூறி வருகிறார். மற்ற அரசுத் துறையினர் வசூலில் தீவிரம் காட்டுவது போல் நகராட்சியும் தீவிரம் காட்ட வேண்டும். ஆகையால் எல்லாப் பிரிவு தலைமை அலுவலகர்களும் சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்குத் தேவையான அறிவுரை வழங்கி வழங்கப்பட்ட டிக்கட்டுகள் அனைத்தையும் விற்பனை செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் 11, 12—2—1978 ஆகிய இரு தினங்களும் விடுமுறையாதலால் 10—2—1978-க்குள் விற்பனை செய்த தொகை செலுத்துவதுடன் விற்பனை செய்ய இயலவில்லையென ஒரு டிக்கட் கூடத் திருப்பித் தரக் கூடாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது வற்புறுத்தப்பட்ட ஒன்று அல்லவா ? ஒரு டிக்கட் கூடத் திருப்பித் தரக்கூடாது என்று சொல்லி அனைத்துப் பிரிவு தலைமை அலுவலர்களுக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. மிச்சப்பட்டிருக்கும் டிக்கட்டுகளை யாரிடத்தில் கொடுப்பார்கள்? யாரும் வாங்கவில்லை என்றால் அவர்களே பணம் போட்டுத்தானே தர வேண்டும். இது கெடுபிடி அல்லவா? இதற்கு முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொள்கிறாரா?

அதைப் போல் இன்னொன்று. கோபி பிரஸ், கோவையில் அச்சடிக்கப்பட்ட நன்கொடைச் சீட்டு. தமிழக அரசு முதலமைச்சர் புயல் நிவாரண நிதி என்று போடப்பட்டிருக்கிறது. நன்கொடைச் சீட்டில் எண்ணே கிடையாது. கையெழுத்தும் கிடையாது. பத்து ரூபாய்ச் சீட்டு; இதில் ஊழல் நடைபெற்றிருக்கக் கூடுமா, கூடாதா? இதை விசாரிக்க வேண்டுமா? வேண்டாமா?

[பிற்பகல் 12—50]

இன்னொன்று. மாவட்ட ஆட்சித் தலைவர் நேர்முக உதவியாளர் என்று அச்சடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கையெழுத்துப் போடாமலே ரசீது கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே ஊழல் நடைபெற்றிருக்கலாமா இல்லையா? சேலம் நகராட்சி அலுவலகத்தின் அறிக்கையை நான் படித்துக் காட்டினேன் அந்த அறிக்கையின் நகலை நான் வைத்திருக்கிறேன். தேவையானால் நான் அரசுக்குத் தர தயாராக இருக்கிறேன்.

ஒரு நகரசுத்தி தொழிலாளருக்கு சிபாரிசு செய்தது ஒரு பெரிய குற்றமாக அமைச்சர் இராகவானந்தத்தால், இங்கு எடுத்துச் சொல்லப் பட்டது. ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்ட

1978 மார்ச் 1] [திரு. மு. கருணாநிதி]

மன்ற உறுப்பினர்கள் எதிலும் தலையிடுவதில்லை என்று முதல மைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் மற்ற அமைச் சர்களும் பெருமையாகப் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

பர்கூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களின் செயல் முறைகள் முன்னிலை, திரு. ரா. தேவராஜன் ந. க. எண். 12354/77சி. 1நாள் 4—1—1978 பொருள் கல்வி ஆரம்பக் கல்வி பர்கூர் சட்டமன்றத் தொகுதி எம். எல். ஏ. எஸ். ஜி. ஆறுமுகம் அவர்களின் சிபாரிசின் பேரில் மாறுதல் அளித்தல் ஆணையிடல் தொடர்பாக, பார்வை மாவட்ட கல்வி அலுவலர் ந. க. எண். 15218/77 இ. நாள் 20—12—1977.

ஆணை : பார்வையில் கண்டுள்ள மாவட்ட கல்வி அலுவலரின் ஆணையின்படி கீழ்க்கண்டுள்ளபடி மாறுதல் அளித்து ஆணை யிடப்படுகிறது அவர்கள் உடனடியாக விடுவிப்புப்பெற்று புதிய பள்ளிகளில் சேர்ந்துகொள்ள வேண்டியது. தொடர்புள்ள தலை மையாசிரியர்கள் விடுவிப்பு மற்றும் சேர்த்துக்கொண்டு அறிக் கைகளை உடனடியாக சமர்ப்பிக்க வேண்டியது, ஆசிரியரின் பெயர் என். பெரிய தம்பி. இடைநிலை உதவி ஆசிரியர், கரடிக் கொல்லுப் பட்டி, மாறுதல் அளிக்கும் பள்ளியின் பெயர், ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி கே. புதூர் வரிசை எண் 2க்குப் பதிலாக ஆசிரி யர் ஆ. சிவானந்தம் இடைநிலை ஆசிரியர் கே. புதூர் மாறுதல் அளிக்கும் பள்ளியின் பெயர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி கரடிகொல்லுப்பட்டி, வரிசை எண். 1க்குப் பதிலாக ஒப்பம் தேவராஜன்.

ஆக, ஒரு எம். எல். ஏ. வுக்குப் பிடிக்காத காரணத்தால் எம் எல் ஏ அவர்களின் சிபாரிசின்பேரில் மாறுதல் அளித்தல் என்று தெளிவாகவே குறிப்பிட்டிருக்கிறார்கள், இதனுடைய நகல் என்னிடத்தில் இருக்கிறது உங்களுக்கு அது தேவை யானால், நீங்கள் விசாரணை நடத்த வேண்டுமென்றால் கடிதத்தின் நகலைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் கட்சிக் கண்ணோட்டத்தோடு எந்தக் காரியமும் நடைபெறுவதில்லை என்று அடிக்கடி கூறப் படுகிறது அது பெரிதாகப் பேசப்படுகிறது.

மக்கள் குழு அமைக்க ஒரு உத்தரவு பிறப்பித்தார்கள். ந,க.அ. எண், 3—1025/78 நாள் 28—1—1978 ஊராட்சி ஒன்றியம் அரவக்குறிச்சி, அனுப்புதல் எம், சிதம்பரம் பி.எஸ் ஸி. ஆணையர், ஊராட்சி ஒன்றியம் அரவக்குறிச்சி பெறுதல் : எல்லா ஊராட்சித் தலைவர்களுக்கும் பொருள்: குழு ஊராட்சி அளவில் சட்டப்படி இல்லாது அமைக்கும் குழுப் பட்டியலில் அ. இ. அ. தி. மு. க. உறுப்பினர் பட்டியல் அனுப்பப் பட்டது. தகவல் : இந்த அலுவலகத்தின் இதே எண்ணுள்ள 27—1—1978 தேதிய கடிதம் தங்கள் ஊராட்சியில் மக்கள்

குழு அமைத்து உறுப்பினர்கள் பட்டியல் அனுப்பிவைக்கும் ப மேற்காணும் இந்த அலுவலகத்தின் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. அப்படி அமைக்கப்படும் குழுவில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் தங்கள் ஊராட்சிப் பொறுப்பில் உள்ள நபரை அ. இ. அ. தி. மு. க. கட்சியின் சார்பில் உறுப்பினராக அவசியம் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. ஒப்பம் எம். சிதம்பரம் நகல். தொடர்புள்ள ஊர் நல உதவியாளர்களுக்கு. இது கட்சித் தலையீடா இல்லையா?

குழு அமையுங்கள் அதிலே எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று ஆணை போகவில்லை, இதிலே அகில இந்திய அண்ணா தி. மு. க. வைச் சேர்ந்த ஒருவரை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஆணை போகிறது. இது கட்சித் தலையீடா இல்லையா? முதலமைச்சர் சொல்கிறார் அதிகாரிகளே, கவலைப்படாதீர்கள், நான் இருக்கிறேன், நான் இருக்க பயம் ஏன் என்று அபயம் கொடுத்திருக்கிறார்.

இதைப் போலவே குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு மிகப் பயங்கரமாக மிகக் கெடுபிடியாக தரப்பட்டுள்ள அறிக்கையிலே ஒரு நபருக்கு இவ்வளவு பேர்கள் அழைத்து வர வேண்டும். தவறினால் சம்பந்தபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு கிராம சேவக் 15 பேர்களை அழைத்து வர வேண்டும், இது சாதாரண காரியமா? ஒரு மருத்துவ மாது 27 பேர்களை அழைத்து வர வேண்டும். ஒரு ஆயா ஒரு நபர் 27 பேர்களை அழைத்து வர வேண்டும். கிராமசேவிகள் ஒரு நபர் 15 பேர்களை அழைத்துக்கொண்டு வர வேண்டும். பால சேவிகள் ஒரு நபர் இரண்டு பேர்களை அழைத்துக் கொண்டுவந்தாக வேண்டும் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு. இந்த கெடுபிடியின் காரணமாகத்தான் சில பைத்தியம் பிடித்தவர்களுக்கும் மனநோய் உள்ள வாலிபர்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு செய்யப்பட்டு ஆபத்தான நிலையில் இருக்கிறார்கள் என்று ஏடுகளிலே எல்லாம் கூட செய்திகள் வந்தன. இவைகள் எல்லாம் அதிகாரிகள் மட்டத்தில் நடைபெறுகின்ற தவறுகள் என்று அரசின் சார்பில் சொன்னால்கூட அவைகளில் அரசுக்கும் பொறுப்பு உண்டு என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பெயரே பிடிக்காதவர்கள், உயிரோடிருப்பவர்கள் தங்கள் பெயரை நகரங்களுக்கு வைக்கிறார்கள், ஊர்களுக்குப் பெயர் வைத்துக் கொள்கிறார்கள், அவைகளை எல்லாம் அழிக்க வேண்டும் என்று முடிவெடுத்தவர்கள்,

ஒரு அறிக்கையைப் படிக்கிறேன்.

From

K. T. Vaidyalingam,
Assistant Executive Engineer,
TWAD Board/EWS SUB-DIVISION
Tiruchengodu.
TO THE COMMISSIONER
PALLIPALAYAM.

Sub: HONOURABLE MINISTER FOR LABOUR-INSPECTION OF Tiruchengode, Salem, II and Mettur Constituencies on 16th and 17 h December 1977 - instruction issused to provide water supply for the newly formed colony Raghavananda Nagar, in Alampalayam Panchayat.

காலனிக்கு வாட்டர் சப்ளை செய்வதில் என்ன தவறப்பா என்று கேட்பீர்கள். என்ன காரணம் தெரியுமா ?

To provide water for the newly formed colony (Raghavananda Nagar, Alampulayam Panchayat).

" இராகவானந்தம் நகர் " என்று பெயரிட்டதும் அமைச்சரே உடனடியாகக் கவனித்து குடிதண்ணீர் திட்டத்தை உடனடியாக கவனிக்கிறோம் என்று கவனிக்கின்ற அளவுக்குப்பெயரிலே மோகம் இல்லாதவர்கள் இப்படிச் செயல்படுகிறார்கள்.

நிதியமைச்சர் கூடச் சொன்னார். நல்ல காரியத்திற்காக—அரசாங்கக் காரியத்திற்காக அதிகாரிகள் கொஞ்சம் கெடுபிடியாக நிதி வசூலிப்பது தவறாகாது, கட்சிக் காரியத்திற்காகத்தான் இப்படிச் செய்யக் கூடாது என்று நிதியமைச்சர் திருச்சியிலே நிருபர்களிடம் கூறினார். நிருபர்களிடம் பேசிய அதே திருச்சியில் தான் கட்சி நிதி திரட்டும் நிகழ்ச்சிக்காக அமைச்சர் ஒருவரே பல இடங்களுக்குச் சென்று வணிகர்களைச் சந்தித்து கட்டாய நிதி வசூல் செய்த குற்றச்சாட்டை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசும்போது இந்த மாமன்றத்தில் நான் சுட்டிக் காட்டினேன்.

இன்னொன்று. " அண்ணா " பத்திரிகை வாங்கா விட்டால் என்ன நடவடிக்கை தெரியுமா ? அதையும் படிக்கிறேன் ; கேளுங்கள்.

ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,
காட்பாடி.
தேதி : 10—11—1977.

குறிப்பு.

பொருள் : சமூகக் நலம்—அண்ணா நாளிதழ்—சமூக கல்வி நிலையங்களுக்கு அனுப்பி வைத்தல்—மேற்படி நாளிதழினை பெற்றுக் கொள்ளாமைக்கு—சமாதானம் கேட்டல்.

பார்வை : நிர்வாக மேலாளர் அண்ணா நாளிதழ் சென்னை அவர்களின் கடிதம் நாள் 7—12—1977.

சேவூர் சமூகக் கல்வி நிலையத்திற்கு அனுப்பப்படும் அண்ணா நாளிதழை சேவூர் ஒன்றியப் பள்ளித் தலைமை ஆசிரியர் திருப்பி அனுப்பி விட்டதாக பார்வையில் குறிப்பிட்ட கடிதத்தில் நிர்வாக மேலாளர் தெரிவித்துள்ளார். அண்ணா நாளிதழினைத் திருப்பி அனுப்பி விட்டமைக்கான சமாதானத்தை இக் குறிப்பாணை கிடைத்த மூன்று தினங்களுக்குள் அனுப்பத் தவறினால் மேற்கொண்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

(ஒப்பம்,)

ஆணையாளருக்காக.

நீங்களும் இதையெல்லாம் செய்யவில்லையா என்று ஒரே வரியில் கேட்கலாம். இதையெல்லாம் மாற்றிச் செய்ய நீங்கள் வந்ததாகச் சொன்னீர்களே, நீங்கள் ஏன் செய்யவில்லை என்பதுதான் கேள்வி. இதையே தொடர்ந்து செய்வதென்றால் நாங்களே இருந்துவிட்டுப் போகிறோம், நீங்கள் ஏன் வர வேண்டும்? உத்தமர்களைப் போலப் பேசிவிட்டு, கடுகளவு தவறும் எங்கள் ஆட்சியிலே நடைபெறாது என்று கூறினீர்கள். நான் இப்படி அடுக்கடுக்காக எடுத்துக் காட்டியிருக்கிறேன், இவ்வளவு குற்றச் சாட்டுகளையும்.

இன்னுமொன்று. அமைச்சரின் பெயரைச் சொல்லாமல் சொல்கிறேன். முதலமைச்சர்கூட இரண்டு நாட்களுக்கு முன்னால் குதிரைப் பந்தய மைதானத்திற்குச் சென்றார். அதாவது சீப் மினிஸ்டர்ஸ் கப் என்ற அந்த விழாவுக்கு முதலமைச்சர் செல்வது வாடிக்கை; அதற்காக நம்முடைய முதலமைச்சர் சென்று அங்கே பேசியிருக்கின்ற பேச்சைப் படித்துப் பார்த்தேன். அங்கே நடக்கின்ற ஊழல்களைப்பற்றி முதல்வர் அங்கே பேசி இருக்கிறார். அந்தக் குதிரைப் பந்தயத்திற்கு முதல்வர் செல்வதைப் போலவோ அல்லது ஒருநாள் அழைக்கப்பட்டு நிதி அமைச்சர் செல்வதாக இருந்தால் அதைப் போலவோ கவர்னர் செல்வதைப் போலவோ இல்லாமல், பந்தயம் நடைபெறுகின்ற

தினம் எல்லாம் ஒரு அமைச்சரின் தாயார் போய் வருகிறார்; அமைச்சரின் தாயார் போவதைக் கட்டுப்படுத்த முடியுமா? எப்படித் தடுக்க முடியும் என்று கேட்கலாம். அமைச்சருடைய தாயார் எதிலே போகிறார் என்றால், சர்க்காருடைய காரிலே போகிறார்.

முதலமைச்சர் பேசியதாக நான் படித்தேன்; அல்லது கேள்விப்பட்டேன். சினிமா தியேட்டர் வாசலில் அமைச்சர்களின் கார்கள் நின்றால்கூட, கட்சியின் தொண்டர்கள் அந்தக் காரைத் தள்ளிக்கொண்டு வந்து அவர்களுடைய வீட்டு வாசலில் போட்டு விடுங்கள் என்று கடுமையான உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக நான் கேள்விப்பட்டு உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைந்தேன். இது சினிமாத் தியேட்டர்கூட அல்ல; முதலமைச்சருடைய துறையான சினிமா தியேட்டர்கூட அல்ல. முதலமைச்சருக்கும், எனக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் பிடிக்காத குதிரைப் பந்தயத்திற்கு ஒரு அமைச்சருடைய தாயார் செல்கிறார், சர்க்காருடைய காரிலே செல்கிறார். போட்டோக்கள் இருக்கின்றன. நான் நிதியமைச்சரிடம் தருகின்றேன். இதைத் தந்து விட்ட காரணத்தால் வேறு போட்டோக்கள் இல்லாமல் போய்விடவில்லை. ஆகவே, நிதியமைச்சரிடம் அந்தப் போட்டோக்களைத் தருகிறேன். அந்தக் காரின் நம்பர் இருக்கிறது. அந்தப் போட்டோவைத் தருகின்றேன். இந்தப் போட்டோ—அவர்கள் போய் டிக்கெட் வாங்குகிறார்கள், அதையும் தருகிறேன், இது காரிலிருந்து இறங்குகிறார்கள், இதையும் தருகிறேன். இது டிக்கெட் வாங்குகின்ற இடத்திற்குச் செல்கிறார்கள், அதையும் தருகிறேன். அவர்களோடு செக்யூரிட்டி ஆபிசர் செல்கிறார் அதையும் தருகிறேன். இவ்வளவு படங்களையும் தருகின்றேன்.

[பிற்பகல் 1-00.]

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: எதிர்க்கட்சித் தலைவருக்கு எவ்வளவோ வேலைகள் இருந்தும், இதிலேயும் அக்கறை காட்டுகிறார் என்பதில் எனக்குத் திருப்தி.

திரு. மு. கருணாநிதி: இப்பொழுதெல்லாம் எதிர்க்கட்சித் தலைவருக்கு இதுதான் வேலையாக இருக்கும். ஏனென்றால், நீங்கள் செய்ததை நாங்கள் செய்ய வேண்டாமா? இவ்வளவு ஆதாரங்களையும் உங்களுக்குத் தந்திருக்கிறேன். இவைகளைப் பற்றி நீங்கள் பதில் அளிக்கும்போது எனக்கு விளக்கம் அளிப்பீர்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால், புத்தருடைய ஆட்சி, உத்தமர்களுடைய ஆட்சி என்று கூறி, கழக ஆட்சி ஊழல் ஆட்சி, ஊழல் ஆட்சி என்று புகார் கூறித் தொடர்ந்து 5 ஆண்டுக் காலத்தைக் கடத்தி விடலாம் என்று எண்ணுகிறீர்கள். உங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே நல்ல திட்டங்கள், மக்களை வாழ்விக்கின்ற திட்டங்கள், மக்களுக்கு முன்னேற்றம் தருகின்ற திட்டங்கள் தாழ்த்தப்பட்ட மக்களை, பிற்படுத்தப்பட்ட மக்களை

உண்மையிலே முன்னேற்றுகிற திட்டங்கள் இருந்தால்தான் நீங்கள் மக்கள் மத்தியிலே தொடர்ந்து செல்வாக்கைப் பெறமுடியும் என்பதை எடுத்துக் கூறி, அவைகளைப் பெறுகிற அளவுக்கு இந்த நிதிநிலை அறிக்கை இல்லை என்பதைக் கூறி, இந்த அளவோடு அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

294. 1975 ஆம் ஆண்டு திட்டமிடல் அதிகார மன்ற (வளர்ச்சிக் கட்டணங்கள் விதித்தல்) விதிகளைச் செய்வது குறித்த ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 20—12—1977 ஆம் தேதி இடப்பெற்ற 2039 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர்ப்புற—நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெறுகிறது.)

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.